**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06012021-4183

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 27.04.2021

Accepted: 02.06.2021

Published: 01.07.2021

Citation:
Premkumar, S. "Exorcism Rituals." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 1, 2021, pp. 138–145.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4183

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Exorcism Rituals

**S. Premkumar**
*M.Phil. Scholar, Tamil Department*
*Gandhigram Rural Institute, Gandhigram*
https://orcid.org/0000-0002-6783-5964

**Abstract -** The belief that nature and the spirits of dead humans, contrary to nature, haunt the living is prevalent. Man also worshiped these superstitions out of fear. Humans considered the spirits of the virtuous to be gods after death and the spirits of the wicked to attack and afflict people. Tolkappier points out that fear is one of the human emotions in numerical reality and is primarily one of the characteristics of women in particular. Based on such fears, they believed that the spirit of Theor was easily attacked by demons, demons, black snakes, etc., and could not bring various sufferings to women. Women believe in certain rituals to get rid of these. One of these is the ritual of exorcism with the priest. This article seeks to illustrate these rituals through a field study conducted at Kalikovil in Attupatti, near Vittal Nayakkan Patti, Dindigul District.

**Key Words:** Folk lore/ Spirit, Demon, Sage, Ritual, Exorcism

**References**

1. Rathinasamy, C.M. *Thurmaranam ...Alaikindrana*, Iyanthavar Avikaludan Neengalum Pesalam, Narmada Pathipagam, P.21.
2. Subbaiah Poosari, C. *Manithargalukku....Alaivar*, Jakkammanayakkanpatty, Dindigul.
3. Subbaiah Poosari, C. *Devargal… Moovaral*, Jagammanayakkanpatti, Dindigul.
4. Subbaiah Poosari, C. *Potachcha … Poosari*, Jagammanayakkanpatti, Dindigul.
5. Veluchamy Poosari, *Irupathainthu… Pidipathillai*, Chettiyapatti, Dindigul.
6. Muthuraman Poosari, *Thirumana Thadai…. alagindranar*, Athupatti, Dindigul.
7. Kamatchi, M. *Manitha samooga... uruvakikolkiran*, Sangakalam: Tholporul Aaivugal, New Century Book House, P.194.
8. Subhash Chandra Bose, S. *Niraimozhi ... Enbar*, Tolkappiyam – Porulathigaram - Seiyul- P.483 (e.g.) Iyal Vezhiyedu.
9. Gnanasekaran, T. *Manthira sadangukalai... poosariyaga matrinan*, Nattar Samayam: Thotramum Valarchiyum, Curie Publication, P.2.
10. Veluchamy, *Paivotum nigalvanathu...nadaiperukirathu*, Chettiyapatti, Dindigul.
11. Ramanan, Spiritualist, *Manithargalin than ... vurugakapaduthiyullanar*, Dindigul.
12. Kailasapathy, K. *Kotravai ennum…. Kalanthu kondal*, Pandai Thamizhar Vazhvum Vazhipadum, Kalachuvadu, P.169.
13. Subbaiah, C. Priest, *Poosari oru….. ena kanikirargal*, Jakkammanayakkanpatti, Dindigul.
14. Muthuraman Priest, *Pei piditha nabarin…. Thavalgal peapadukindrana*, Athupatti, Dindigul.
15. Muthuraman, Priest, *Kolai... koorapadukirathu* Athupatti, Dindigul.
16. Veluchamy Priest, *Pei matrum... ullanar*, Chettiyapatti, Dindigul.
17. Muthuraman, *Soodathai ... seivar*, Athupatti, Dindigul.
18. Veluchamy Priest, *Peithan… uthavukirathu*, Chettiyapatti, Dindigul.
19. Gunaseran, Karu. Ala., *Pei pidithavar...endru kooruvar*, Nattupura Mannum Makkalum, New Century Book House, P.108.
20. Veluchamy Priest, *Marathil mudiyai... niraivu seiyum*, Chettiyapatti, Dindigul.

# பேயோட்டும் சடங்குமுறைகள்

***சௌ. பிரேம்குமார்***
எம்.பில். பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம்

***ஆய்வுச்சுருக்கம்***

*இயற்கையும் இயல்புநிலைக்கு மாறாக இறந்த மனிதர்களின் ஆவியும் உயிரோடு வாழும் மனிதர்களைத் துன்புறுத்தும் என்ற நம்பிக்கை தொன்றுதொட்டு வழக்கத்தில் உள்ளது. மனிதன் அச்சத்தின் காரணமாக மீவியல்பாற்றல் உடைய இவற்றை வழிபடவும் செய்தான். மனிதர்கள் இறந்தபின் நற்குணமுடையவர்களின் ஆவி தெய்வங்களாகவும் தீய குணமுடையவர்களின் ஆவி மக்களைத் தாக்கித் துன்பம் செய்யக்கூடியதாகவும் கருதினர். எண்வகை மெய்ப்பாட்டில் அச்சத்தை மனித உணர்வுகளில் ஒன்றெனவும் குறிப்பாகப் பெண்களின் பண்புநலன்களில் முதன்மையானது எனத் தொல்காப்பியர் சுட்டுகிறார். இத்தகைய அச்சத்தை அடிப்படையாகக்கொண்டு தீயோரின் ஆவி பேய், பிசாசு, கருப்பு, முனி போன்றவற்றினால் எளிதில் தாக்கி பெண்களுக்குப் பல்வேறு துன்பங்களையும் தரவல்லது என நம்பினர். இவற்றிலிருந்து பெண்கள் விடுபட சில சடங்கியல் முறைகளில் நம்பிக்கை கொண்டுள்ளனர். இதில் பூசாரி கொண்டு பேயோட்டும்சடங்கு முறையும் ஒன்று. இச் சடங்கியல் முறைகளை திண்டுக்கல் மாவட்டம் விட்டல் நாயக்கன் பட்டி அருகிலுள்ள ஆத்துப்பட்டியிலுள்ள காளிகோவிலில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் மூலம் இக்கட்டுரை விளக்க முயல்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *நாட்டுப்புறவியல், ஆவி, பேய், முனி, சடங்கியல், பேயோட்டும் சடங்கு முறை*

## பேய், முனி பற்றிய கருத்தாக்கங்கள்

துர் மரணம் (விபத்து, கொலை, தற்கொலை) அடைந்தவர்களின் ஆவி மற்றும் பழிபாவங்களுக்கு அஞ்சாத ஆவிகளே பேயாக அலைகின்றன.[1] மனிதர்களுக்கு பூமியில் வாழும் காலம் அறுபது ஆண்டுகள் ஆகும். இதைப் பிரம்மன் கொடுத்தார் என்றும் இதற்கிடையே இறக்க நேரிடும்போது ஆவியாக அலைவர் என நம்பப்படுகின்றது. பாம்பு சீறுவது போலவும், காற்று சீறுவது போலவும் ஒரு கற்பனை தோன்றும்போது மனதில் ஏற்படும் மிகுதியான அச்சத்தினால் பேய் பிடித்ததாக மக்கள் நம்புகின்றனர். தேவர்கள் மூவரால் கொல்லப்பட்ட அரக்கர்களே இந்த முனிகள் என்கின்றனர் பேயோட்டும் பூசாரிகள். முனியாவது எல்லைமுனி என்றும், சுடலை முனி என்றும் இரண்டு வகை உண்டு. எல்லை முனி ஊரைக் காவல் காக்கும் தெய்வமாகவும், சுடலை முனி சுடுகாட்டை காவல் காக்கும் என்கின்றனர். மாதவிடாய் காலங்களில் இவ்விடங்களுக்குச் செல்லும்போது பெண்களைப் பிடித்துக் கொள்ளும் என்கின்றனர்.

**பொதச்ச வழியில சுத்தமில்லாம**
**பொழுது சாயுற நேரத்துல போனா**
**மனசுக்கு இதமா ஆதரவு தருவான்னு**
**சூறாவளிக் காத்து போல சுத்தி வந்து**
**புடுச்சேன் உடும்புப் புடியா பூசாரி**

என்ற இப்பேயோட்டும் பாடல் வரிகளில் மாதவிடாய் ஏற்பட்ட பெண்ணைப் பேய் பிடித்துள்ளதை அறியமுடிகிறது. இதன் மூலம் பெண்கள் வெளி இடங்களுக்குத் தனிமையில் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு செல்வத்தைத் தடுக்க சமூகக் கட்டுப்பாட்டை வகுத்துள்ளதை இதன் வழி அறியலாம்.

இத்துடன் பேயாக அலையும் ஆவியின் நிலையை காணும்போது தனக்கு ஏற்பட்ட துன்பங்களுக்கு ஆறுதல் தேட முயலுகின்ற தன்மையை உணரமுடிகிறது.

### பெண்களுக்குப் பேய் பிடிக்கும் வயது

இருபத்தைந்து வயது முதல் ஐம்பது வரையுள்ள பெண்களைப் பேய் பிடிக்கும் என்பர். பருவம் எய்தாத பெண்களையும் மாதவிடாய் நின்ற முதிய பெண்களையும் பேய்கள் பிடிப்பதில்லை. இவ்வயதில் மாதவிடாய் நிகழக்கூடிய காலமும் மாதவிடாய் முற்றிலுமாக நின்றுவிடக்கூடிய வயது என மருத்துவர்கள் வரையறுத்துள்ளனர். இவ்விடைப்பட்ட வயதினருக்கு ஏற்படும் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் ஏற்படக்கூடிய சிக்கல்களினால் பெண்கள் தங்கள் உறவினர்களிடம் வெளிப்படுத்தக்கூடிய மாறுபட்ட செயல்பாட்டை வைத்து இப்பெண் பேய் பிடித்ததாக அறியாமையை உடைய மக்களால் நம்பப்படுவதை முடிகிறது. மாதவிடாய் காலங்களில் பெண்களின் மீது ஆண் தனது ஆதிக்கத்தைச் செலுத்த முற்படுகிறான். இந்நிலையில் பெண் தனது உடல் மற்றும் மனதளவில் பாதிப்படைவதும், அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்தான அறியாமையினால் தனது இயல்பு நிலையில் இருந்து மாறுபட்ட செயல்பாடுகளினால் காண்போர் பேய் பிடித்ததாக நினைக்க வாய்ப்பாக அமைவதைக் காணமுடிகிறது. இத்துடன் இறந்தவர்களின் இறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு வருவதும் தீட்டாக மக்களிடையே நம்பப்படுகிறது. இவையும் பெண்களுக்குப் பேய் பிடித்துக்கொள்ள ஏதுவாக அமையும் என மக்கள் நம்புவதைக் காணமுடிகிறது.

### பேய் பிடித்த பெண்களுக்கு ஏற்படும் துன்பங்கள்

பேய் பிடித்தலும் மனிதர்களுக்கு ஒரு வகை நோயாகவே கருதப்படுகிறது. இச்சமயத்தில் பேய்பிடித்த பெண்ணுக்கு உடல் மற்றும் மன அளவில் பாதிப்புகள் ஏற்பட்டு பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர். திருமணத்தடை, திருமணமான பெண்களுக்கு குழந்தையின்மை, உடல்வலி, தூக்கமின்மை போன்ற பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர். இதன் காரணமாகவே மனப்பிறழ்வு ஏற்படுவதாக அறிஞர்கள் கருதுகின்றனர். பேய் பிடித்தலால் ஒரு பெண்ணிற்கும் அவரைச் சார்ந்த சுற்றத்தினருக்கும் பல சிக்கல்களுக்குக்கு வழியாக அமைவதை அறிய முடிகிறது. உரிய வயதில் நிகழாத திருமணம், திருமணமானவுடன் கிடைக்காத மகப்பேறின்மை, ஓய்வில்லா உழைப்பு போன்ற காரணங்களின் வழியாக சமூகக் கட்டமைப்பில் ஒரு பெண்ணை மற்றொரு பெண் இழிவுபடுத்தக்கூடிய சூழலில் ஏற்படும் மனப்பிறழ்வே பேய்பிடித்தலுக்கு வித்திடுகிறது.

### மந்திரங்களும், மந்திரவாதிகளும்

மனித சமூகப் பரிணாம வளர்ச்சியில் நம்பிக்கைகளும் சடங்கியல் முறைகளும் இயற்கை சூழலைக் கட்டுப்படுத்த மனிதன் உருவாக்கிக் கொள்கிறான்.[2] இத்தகைய சடங்குகளைச் செய்பவனின் தன்மையை தொல்காப்பியம் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

> **நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
> **மறைமொழி தானே மந்திரம் என்பர் –**
> **(தொ.பொ.செய்யுளியல் – 483)**

எனும் நூற்பா வார்த்தை தவறாத சான்றோர்களின் ஆற்றல் வாய்ந்த வாய்மொழியாகிய மறைமொழியை மந்திரமொழி என்கிறது. மேலும், பாடல் பாடுதல் என்பது மந்திரத்துடன் தொடர்புடையதாக இருந்துள்ளது. மந்திரச் சடங்குகளை நடத்திய இனக்குழுத் தலைவன் அல்லது மந்திரவாதி கடவுளுக்கு வழிபாடு செய்யும் பூசாரியாக மாறினான்.[3] இவ்வாறு வார்த்தை மாறாத் தன்மையுடைய சான்றோர்களின் வாய்மொழி மந்திரமொழியாகவும், அம் மந்திர மொழியை பாடல் வடிவில் கடவுள் வழிபாட்டிற்குப் பயன்படுத்தினர். அதன் மூலம் தெய்வீக ஆற்றலைத் தனக்குள்

பெற்று குறி கூறுதல், நோய்களைத் தீர்க்கும் சடங்குகளைச் செய்தல் போன்ற செயல்களின் வழியாக மக்களின் துன்பங்கள், நோய்கள் போன்றவற்றைத் தீர்த்து வைக்கும் ஒரு மருத்துவர் என்ற நிலையில் பூசாரிகள் இருந்துள்ளனர். இவர்கள் மீது நாட்டுப்புற மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை இன்றும் கிராமங்களில் காணமுடிகிறது.

## பேயோட்டும் பூசாரியின் தோற்றம்

பேயோட்டும் பூசாரிகள் கனத்த உருவத்துடனும், நெற்றியில்திருநீறு, சந்தனம், குங்குமம்பூசுகின்றனர். பெரிய மீசையும் வைத்துள்ளனர். விழியைச் சுழற்றி எதிரே இருப்பவரைப் பார்க்கும்போது அச்சமூட்டும் வகையில் கண்கள் சிவந்து காணப்படுகிறது. மேல்சட்டை அணியாமல் கழுத்தில் உருத்திராட்சமாலை அணிந்தவர்களாகவும், கைகளில் செப்புக் காப்பினை அணிந்தவர்களாகவும் உள்ளனர். இவர்களின் தோற்றம் காண்போரை பிணிகள் நீக்கம் வல்லமை உடையவர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. மேலும், இவர்களின் தோற்றமும் அணிகலன்களும் தன்னைவிட மீவியல்பாற்றல் கொண்ட சக்திகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் எதிரே இருப்பவரை அச்சமூட்டும் நிலையை ஏற்படுத்துவதாக எண்ணத் தோன்றுகிறது.

## பேயோட்டும் நாட்கள் மற்றும் நேரம்

பேயோட்டும் நிகழ்வானது பெரும்பாலும் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இரவு ஒன்பது மணியிலிருந்து விடியும்வரை நடைபெறுகிறது. இவ்விரு நாட்களிலும் கிரகங்களின் ஈர்ப்பு விசை அதிர்வுகள் அதிகமாகக் காணப்படுவதால் பெரும்பாலும் இவ்விரு நாட்களிலும் பேயோட்டும் நிகழ்வு நடைபெறுவதாகக் கூறுகின்றனர். இவ்விரு நாட்களும் சிறப்பிற்குரிய நாட்களாக மக்களால் இன்றும் நம்பப்படுவதை காணமுடிகிறது. பேயோட்டும் நிகழ்வு நடைபெறும் இடம் திண்டுக்கல் மாவட்டத்தைப் பொருத்தவரையில் காளிகோவிலில் இப்பேயோட்டும் சடங்குகள் நடைபெறுவதைக் காணமுடிகிறது. மனிதர்களின் தான் என்ற அகங்காரத்தின் வெளிப்பாடே இக்காளி எனப்படுகிறது. காளியின் புறத்தோற்றமானது மனித அகங்காரத்தை ஒடுக்கும் உக்கிரமான புறத்தோற்றத்தை பூசாரிகள் உருவகப்படுத்தியுள்ளனர். பரணி இலக்கியத்தில் பண்டைத் தமிழ் மறவர்கள் வழிபட்ட பாலைநிலத் தெய்வம் கொற்றவை என்கிறது. கொற்றவை என்னும் பழைய திராவிடத் தெய்வமே காளி, பராசக்தி, ஜெகதாம்பாள், பார்வதி என்றெல்லாம் ஆரியக் கடவுள்களுடன் பிற்காலத்தில் கலந்து கொண்டாள் என்பார் க.கைலாசபதி இதன்மூலம் போர்க்களத்தில் அகங்காரம் கொண்டு போரிட்டும் மறவர்களின் அகங்காரத்தை ஒடுக்கி அவர்கள் மறந்துவிடச் செய்யும் பாலைநிலத் தெய்வமான காளிக்கு ஆற்றல் உண்டு. அகங்காரத்தை அடிபணியச் செய்யும் ஆற்றல் பெற்றவளாக காளி இருப்பதைக் காணமுடிகிறது. பேய்களின் தலைவியாக காளி சுட்டப்படுகிறது. கலிங்கத்துப்பரணியில் பேய்கள் காளிக்குக் காவலாக உள்ளது. ஏவல் வேலை செய்து காளிக்குக் கட்டுப்பட்ட நிலையில் உள்ளது. இவற்றின் எச்சமாகவே இன்றும் காளிகோயிலில் பேயோட்டும் சடங்குகள் நிகழ்த்தப்படுவதைக் காணமுடிகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில்தாடிக்கொம்பை அடுத்து விட்டல் நாயக்கன்பட்டிக்குக் கிழக்கே ஆத்துப்பட்டியில் உள்ள காளியம்மன் கோவிலில் பேயோட்டும் சடங்குகள் அதிகளவில் நடைபெறுகின்றன.

## குறிபார்த்தல்

பூசாரி ஒரு நபருக்குப் பேய் பிடித்துள்ளதா என்பதை அறிய சோவி போட்டுப் பார்க்கிறார். சோவியைப் பூக்கள் என்றும் முத்துக்கள் என்றும் அழைக்கின்றனர். இதில் பன்னிரண்டு முத்துகள் உள்ளன. இதில் ஒன்பது முத்துகள் கிரக பலன்களுக்காகவும், மூன்று முத்துகள்

விருத்தங்களாகவும் அமைகின்றன. இப்பன்னிரு பூக்களில் பத்து மலர்ந்தால் பங்கப்பட்டவர்கள் அதாவது இறந்தவர்கள் என்று கணிக்கிறார்கள். மேலும் இப்பூக்களில் ஆறு மற்றும் ஐந்து என பூக்கள் மலரும்போது இறந்து பேயாகப் பிடித்திருப்பது பெண் மற்றும் ஆண் எனக் கணிக்கிறார்கள். இதன்மூலம் ஒன்பது கிரகங்கள் மற்றும் பன்னிரு இராசிகளை அடிப்படையாக வைத்தே பூமியில் வாழும் மனிதர்களின் வாழ்வின் இன்ப, துன்பங்கள் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறுகின்றனர். இத்தகைய கிரக பலன்களை கணிக்கும் திறன் பழங்காலந் தொட்டு இன்றுவரை பின்பற்றப்படுவதை இங்குக் காணலாம்.

## பேயோட்டும் சடங்குமுறைகள்

பேய் பிடித்த நபரின் தலைமுடி அவிழ்க்கப்பட்டு முழங்காலில் காளியம்மனைப் பார்த்தவாறு அமர்கிறார். பூசாரி காளியம்மனை வணங்கி விபூதியைப் பேய் பிடித்தவரின் தலையில் தூவுகிறார். உடனே பேய்பிடித்தவர் தலைசுற்றி ஆட ஆரம்பிக்கிறார். மற்றொரு பூசாரி முறத்தைக் குப்புற கவிழ்த்து அதன் மீது திருநீற்றைப் பரப்புகிறார். அதில் முருகன் அல்லது காளிக்குரிய சக்கரத்தை வரைகிறார். அதன்பின் அம்முரத்தை பேய்பிடித்தவரின் தலைமேல் வைத்தவுடன் பேய்பிடித்தவர் தலைசுற்றி ஆட ஆரம்பிக்கிறார். பூசாரியால் கேட்கப்படும் வினாக்களுக்கு (ஊர், பெயர், ஆணா? பெண்ணா, இறக்க காரணம், இப்பெண்ணை பிடித்துக் கொண்ட காரணம்...) பேய் பிடித்தவர் பதில் கூறத் தொடங்குகிறார். இந்நிகழ்வு பூசாரிக்கும் பேய்க்கும் இடையே உரையாடலாய் அமைகிறது. இதன் மூலம் பேய் தன் விவரங்களையும், தனது ஆற்றாமையை வெளிப்படுத்தக்கூடியதாக இது அமைகிறது. இவ்வாறு பதில் கூறாத பேய்களை எருக்களக் கம்பினை வைத்து அடிப்பது போல் பாசாங்கு செய்வதும், சில நேரங்களில் தலையில் அடிப்பதும் உண்டு. உரத்த குரலில் அதட்டியும் பேய் பற்றிய தகவல்கள் பெறப்படுகின்றன. பூசாரி தன்னால் மட்டுமே இத்தகைய செயல்களைச் செய்ய முடியும் எனும் தன் முனைப்பின் வழி பிறர் மீது அதிகாரத்தைச் செலுத்தி தனது இருப்பை நாட்டுப்புற மக்களிடையே நம்பிக்கையாக நிலைபெறச் செய்ய முயற்சிக்கிறார். இச்செயல்பாடுகளுக்கு தெய்வத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை இங்கு காணமுடிகிறது. இறந்தவர்களின் ஆவியானது ஒரு பெண்ணைப் பிடித்திருப்பது தனக்கு நேர்ந்த கொடுமைக்குக் காரணமானவர்களை பழிவாங்கும் எண்ணத்துடன் பெண்ணை ஒரு ஊடகமாகப் பயன்படுத்திக் கொள்வதையும் காணலாம்.

## இறப்பிற்கான காரணம்

கொலை, தற்கொலை, விபத்து, வஞ்சம், வன்புணர்வு, தகாத உறவு போன்ற காரணங்களால் இறந்தவர்களின் ஆவியே பேயாகப் பெண்களைப் பிடிக்கிறது. முனி, கருப்பு போன்ற நாட்டார் தெய்வங்கள் பெண்கள் மாதவிலக்கு ஏற்படும் நேரங்களில் பிடித்துக் கொள்ளும் என்கின்றனர். பெரும்பாலும் அதிகாலை மூன்றிலிருந்து ஐந்து மணிக்குள்ளும், பிற்பகல் இரண்டு மணிக்கும் பேய் பிடிப்பதாகக் கூறப்படுகிறது. அதிகாலை இருளும் ஆள் அரவமற்ற பிற்பகல் நேரமும் பெண்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தக்கூடியவையாக மக்களிடையே நம்பிக்கையாக உருப்பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

## பேய் வேண்டியது பெறல்

பேய் மற்றும் முனியானது ஒரு நபரைப் பிடித்திருக்கும் பொழுது தனக்கு வேண்டிய பொருள்களைத் தந்தால் பேய் மற்றும் முனி அந்நபரை விட்டுப் போய் விடுவதாகக் கூறுகிறது. இங்கு அதிகமாகப் பெண்களையே பேய் பிடித்திருப்பதால் மல்லிகைப்பூ, உடை, பொட்டு, சீப்பு, சாராயம், இறைச்சி வகைகள், பிரியாணி, லட்டு, ஜிலேபி, சுருட்டு,

கருப்புச்சேவல் போன்ற பொருட்களைக் கேட்கும். பேய் பிடிக்கப்பட்ட பெண்களில் பெரும்பாலானவர்கள் கூலி வேலை செய்பவர்களாக உள்ளனர். தான் பெறும் ஊதியம் அன்றாடச் செலவுகளுக்கே பற்றாக்குறையாகி விடுகிறது. மற்ற பெண்களைப் போல் அலங்காரம் செய்து கொள்ளும் நிலை இல்லாத ஏக்க உணர்வையும் விரும்பியதை உண்ண இயலாத ஏழ்மை நிலையையும் இப்பேய் பிடித்தல் என்ற ஒன்றை கருவியாகப் பயன்படுத்தி தனது ஏக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள ஒரு வாய்ப்பாக அமைவதைக் காணலாம்.

### சத்தியம் பெறல்

பேய் விரும்பிய பொருட்களைப் பெற்றவுடன் பேய் பிடித்த நபரைவிட்டுப் போவதாகக் கூறியபின் பேயிடம் சத்தியம் வாங்கப்படுகிறது. சூடத்தைப் பற்றவைத்து காளியம்மன் சன்னதிமுன் இப்பெண்ணை மீண்டும் பிடிக்கமாட்டேன் என்றும், குழந்தை வரம், உடல்நலம் போன்றவற்றைத் தருவதாக சூடத்தை அனைத்து பேய் பிடித்தவர் சத்தியம் செய்வார். மனிதர்களைப் போலவே பேய்களும் வார்த்தை மாறாத் தன்மையுடையது என மக்கள் நம்புகின்றனர்.

### தலைமுடியில் முடிச்சுப்போடுதல்

பேய் தான் பிடித்திருக்கும் நபரைவிட்டு விலகுவதாக உறுதி கூறியதன் அடையாளமாக பேய் பிடிக்கப்பட்டவரின் தலைமுடியில் ஒரு சிறு பகுதியை எடுத்துத் தர அதை உறவினர்கள் தலைமுடியை முடிச்சுப்போடுவர். இது புளிய மரத்தில் முடியை ஆணியால் அறைவதற்கு முன்பாக எத்தனை பேய் என்பது பற்றிய விவரங்களை மீண்டும் ஒருமுறை பேய்பிடித்த நபரிடம் உறுதிபடுத்த உதவுகிறது. இவ்வாறு புளிய மரத்தில் முடியை ஆணிகொண்டு அரைவது பேய்பிடித்த நபரிடமிருந்து பேய் மரத்திற்குச் சென்று உரைவதாக மக்கள் நம்புகின்றனர். இச்சடங்கு செய்யும்போது பேய் பிடித்தவர் கல்லைத் தலையில் தூக்கிச் செல்வார். இச்செயலை தலை தாங்கிக் கொள்ளுதல் என்று கூறுவர்.

### நீராடல்

மரத்தில் முடியை அறைந்த பின் பேய் பிடித்து விலக்கப்பட்ட நபரை நீராடச் செய்வர். நீராடிய பின் பேயோட்டிய காளியம்மன் சன்னதிமுன் குணமடைந்த அந்நபரை நிற்க வைத்து அவர்முன் ஓர் உலக்கையை தரையில் வைப்பர். அந்நபர் தனது பின்னங் காலினால் தள்ளிவிட்ட பின் பூசாரி திருநீறு பூசி அந்நபரை வீட்டிற்கு அனுப்பி வைப்பார். இத்துடன் பேயோட்டும் சடங்கு நிறைவு பெறும். இதன்மூலம் பேயோட்டும் சடங்குமுறைகள் மீது நாட்டுப்புற மக்கள் இன்றும் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பது புலனாகிறது.

### முடிவுரை

பேய்பிடித்த காலங்களில் பேய்பிடிக்கப்பட்ட பெண் எந்த ஒரு வேளையும் செய்வதில்லை. முழுநேர ஓய்வைப் பெறுகிறாள். உரிய நேரத்தில் தனக்குத் தேவையானவற்றை அதிகாரத்தினால் பெறக்கூடிய சூழல் உருவாகிறது. இதன்மூலம் காலங்காலமாக ஆணுக்குப்பெண் அடிமை என்ற கட்டுப்பாடு மறைமுகமாக உடைத்தெறியும் முயற்சியில் பெண்களை ஈடுபட வைக்கும் ஒரு கருவியாகிறது என எண்ணத் தோன்றுகிறது.

1. அகால மரணமடைந்தவர்களின் ஆவியைப் பேயாகவும், தேவர்கள் மூவரால் கொல்லப்பட்ட அரக்கர்களை முனியாகவும் நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர். இவை பெண்களுக்கு அச்சமும் துன்பமும் தருகின்றன.
2. பெண்களுக்கு ஏற்படும் மாதாந்திரத் தீட்டு, பதின்ம வயதை கடந்த நிலையில் பெண்ணின் நிறைவேறாத ஆசைகளின் ஏக்கமும் உளச் சிக்கல்களை

வெளிக்காட்ட இயலாமை ஆகியவற்றினால் செய்யும் தன்னிலையற்ற செயல்களையே பேய் பிடித்துவிட்டது என நம்புகின்றனர். பிற்பகல் பொழுதும் ஆள் அரவமற்ற சுடுகாட்டுப் பகுதியும் பேய் பிடித்தற்கு ஏதுவாக அமைகின்றன.

3. தெய்வத்தின் அருள் பெறுகின்ற ஒருவன், மீவியல்பாற்றல் கொண்ட சக்திகளால் துன்பப்படுபவர்களின் துயரங்களைப் போக்கும் பூசாரியாகவும், மந்திரவாதியாகவும் கிராமமக்களிடையே கருதப்படுகின்றான்; உயர்ந்த நிலையில் வைத்து எண்ணப்படுகின்றான்.

## துணைநூற்பட்டியல்

1. இரமணன் - ஆன்மீகவாதி - திண்டுக்கல்.
2. காமாட்சி.மு.(தொ.ஆ) - சங்ககாலம்: தொல்பொருள் ஆய்வுகள், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை. மு.ப.2011, ப.194.
3. கைலாசபதி, க. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், காலச்சுவடு, நாகர்கோவில், மு.ப.2016, ப.169.
4. சுப்பையா.சி, பூசாரி - ஐக்கம்ம நாயக்கன்பட்டி திண்டுக்கல்.
5. சுபாஷ் சந்திரபோஸ்.ச.(உ.ஆ) தொல்காப்பியம் (பொருளதிகாரம்), இயல் வெளியீடு, தஞ்சாவூர். மு.ப.2016, நூ.483.
6. ஞானசேகரன்.தே, நாட்டார் சமயம் தோற்றமும் வளர்ச்சியும், க்யூரி பப்ளிகேஷன், மதுரை மு.ப.1992, ப.2
7. முத்துராமன் பூசாரி, ஆத்துப்பட்டி, திண்டுக்கல்.
8. ரத்தினசாமி, சி.எம், இறந்தவர்கள் ஆவியுடன் நீங்களும் பேசலாம், நர்மதா பதிப்பகம், சென்னை, மு.ப.2016, ப.21.
9. வேலுச்சாமி பூசாரி செட்டியபட்டி, திண்டுக்கல்.
10. குணசேகரன், கரு.அழ.நாட்டுப்புற மண்ணும் மக்களும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 2008.

## மேற்கோள்

1. துர்மரணம்... அலைகின்றன சி.எம்.இரத்தினசாமி. இறந்தவர்கள் ஆவியுடன் நீ ங்களும் பேசலாம், நர்மதா பதிப்பகம், ப.21.
2. மனிதர்களுக்கு .... அலைவர் சி.சுப்பையா பூசாரி ஐக்கம்மநாயக்கன்பட்டி, திண்டுக்கல்.
3. தேவர்கள் மூவரால்... என்கின்றனர் சி.சுப்பையா பூசாரி, ஐக்கம்மநாயக்கன்பட்டி, திண்டுக்கல்.
4. பொதச்ச... பூசாரி சி.சுப்பையா பூசாரி, ப.
5. இருபத்தைந்து... பிடிப்பதில்லை வேலுச்சாமி பூசாரி, செட்டியபட்டி, திண்டுக்கல்.
6. திருமணத்தடை... ஆளாகின்றனர் முத்துராமன் பூசாரி, ஆத்துப்பட்டி, திண்டுக்கல்.
7. மனித சமூகப் ... உருவாக்கிக்கொள்கிறான் மு.காமாட்சி (தொ.ஆ.) சங்ககாலம்: தொல்பொருள் ஆய்வுகள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், ப.194.
8. நிறைமொழி... என்பர் தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல் - சுபாஷ்சந்திரபோஸ், நூ.483 ச.சுபாஷ் சந்திரபோஸ் (உ.ஆ), இயல் வெளியீடு.
9. மந்திரச் சடங்குகளை... பூசாரியாக மாறினான் தே.ஞானசேகரன் - நாட்டார் சமயம் தோற்றமும் வளர்ச்சியும் க்யூரி பப்ளிகேஷன், ப.2
10. பேயோட்டும் நிகழ்வானது... நடைபெறுகிறது வேலுச்சாமி, செ ட்டியபட்டி, திண்டுக்கல்.
11. மனிதர்களின் தான்... உருவகப்படுத் தியுள்ளனர் இரமணன் ஆன்மீகவாதி திண்டுக்கல்.

12. கொற்றவை என்னும்... கலந்து கொண்டாள் க.கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், காலச்சுவடு, ப.169.
13. பூசாரி ஒரு... எனக் கணிக்கிறார்கள் சி.சுப்பையா பூசாரி ஜக்கம்மநாயக்கன்பட்டி, திண்டுக்கல்.
14. பேய்பிடித்த நபரின்... தகவல்கள் பெறப்படுகின்றன. முத்துராமன் பூசாரி ஆத்துப்பட்டி, திண்டுக்கல்.
15. கொலை... கூறப்படுகிறது முத்துராமன் பூசாரி, ஆத்துப்பட்டி, திண்டுக்கல்.
16. பேய் மற்றும்... உள்ளனர் வேலுச்சாமி பூசாரி, செட்டியபட்டி, திண்டுக்கல்.
17. சூடத்தைப்... செய்வார் முத்துராமன், ஆத்துப்பட்டி, திண்டுக்கல்.
18. பேய் தான்... உதவுகிறது வேலுச்சாமி பூசாரி செட்டியபட்டி, திண்டுக்கல்.
19. பேய் பிடித்தவர்... என்று கூறுவர் கரு.அழ.குணசேரன் நாட்டுப்புற மண்ணும் மக்களும் நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், ப.108.
20. மரத்தில் முடியை... நிறைவு பெறும் வேலுச்சாமி பூசாரி, செட்டியபட்டி, திண்டுக்கல்.